# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

# M.C.O.P. No.180/2024

PW1– ராமாயி நாள்: 05.06.2025

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு தெரியாது. என் கணவருடன் பிறந்தவர் ஒரு சகோதரி. என் மாமியார் தனியாக இருக்கிறார். நானும் என் கணவரும் தனியாக இருந்தோம். என் கணவர் வருமானத்தை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ7 ஏற்றுக்கொள்ள கூடிய ஆவணமாக இல்லை என்றால் சரியல்ல. இந்த விபத்தில் ஈடுபட்ட 3 வாகனங்களை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு என் கணவரின் கவனக்குறைவு தான் காரணம் என்றால் சரியல்ல. புகார் கொடுத்தது கார் உரிமையாளர் . விபத்திற்கு காரணமான கார் உரிமையாளரை நான் வழக்கில் சேர்க்கவில்லை என்றும் அதனால் இந்த மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது மதுபானம் கடத்தியது தொடர்பாக வழக்கு போடப்பட்டுள்ளது பற்றி எனக்கு தெரியாது. சட்டவிரோத நடவடிக்கைக்காக காரை பயன்படுத்தியதால் அது விதிமீறல் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு வழங்காததால் 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.